மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கு. பிச்சாண்டி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கா. கந்தசாமி.

திரு. கா. கந்தசாமி: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கா. கந்தசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"சட்டத் துறை பற்றிய 32 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.8,33,68,000/–க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் நிறைவுற்றன. பேரவை மீண்டும் நாளை (17–03–2005) காலை 10–00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1–56 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

52. 2003–2004 ஆம் ஆண்டிற்கான புதுக்கோட்டை மாவட்ட ஊராட்சியின் ஆண்டறிக்கை. [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 165 (2) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்).

2005 மார்ச் 16]

53. 2003–2004 ஆம் ஆண்டிற்கான தேனி மாவட்ட ஊராட்சியின் ஆண்டறிக்கை.[1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 165 (2) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்).

54. 2003–2004 ஆம் ஆண்டிற்கான அரசு ரப்பர் கழகத்தின் இருபதாவது ஆண்டறிக்கை. [1956–ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்).

55. 2003–2004 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு வனத் தோட்டக் கழகத்தின் முப்பதாவது ஆண்டறிக்கையும், கணக்குகளும். [1956–ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்).

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

60. மானியக் கோரிக்கை எண் 3 – நீதி நிருவாகம் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2005–2006. (தமிழ், ஆங்கிலம்)

61. மானியக் கோரிக்கை எண் 30 – தகவல் தொழில் நுட்பவியல் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2005–2006. (தமிழ், ஆங்கிலம்)

62. மானியக் கோரிக்கை எண் 32 – சட்டத்துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2005–2006. (தமிழ், ஆங்கிலம்)

63. தகவல் தொழில் நுட்பவியல் துறை பற்றிய செயல் ஆய்வுரை, 2004–2005. (தமிழ், ஆங்கிலம்)

64. தகவல் தொழில் நுட்பவியல் துறை பற்றிய "மக்கள் சாசனம்" என்கிற சிறுநூல் (2005–2006). (தமிழ், ஆங்கிலம்)

65. பொதுக் கணக்குக் குழுவின் இருநூற்று அறுபதாவது அறிக்கை. (2003–2005)

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

[2005 மார்ச் 16

66. பொதுக் கணக்குக் குழுவின் இருநூற்று அறுபத்து ஒன்றாவது அறிக்கை. *(2003–2005)*

67. பொதுக் கணக்குக் குழுவின் இருநூற்று அறுபத்து இரண்டாவது அறிக்கை. *(2003–2005)*

68. பொது நிறுவனங்கள் குழுவின் நூற்று அறுபத்து ஏழாவது அறிக்கை. *(2003–2005)*

69. பொது நிறுவனங்கள் குழுவின் நூற்று அறுபத்து எட்டாவது அறிக்கை. *(2003–2005)*

70. பொது நிறுவனங்கள் குழுவின் நூற்று அறுபத்து ஒன்பதாவது அறிக்கை. *(2003–2005)*

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS